# History of Valvai by Thamilnee Pon Sivakumaran

## திருவேங்கடம் "வேலுப்பிள்ளை அப்பாவின்" மூன்றாம்மாத நி.னைவஞ்சலிக்காக

## வரலாற்று "மூலமாய்" திருவேங்கடம் வேலுப்பிள்ளை

ஒரு நாட்டினது அல்லதுஇனத்தினது வரலாற்றை அறிவதற்கும் அளவிடுவதற்கும் ஆராட்சியாளர்கள் நாடுவது சான்றுகளேயாகும். இவை கட்டிடங்கள், சிற்பங்கள், கோயில்கள், ஓவியங்கள், ஏட்டுச் சுவடிகள், நூல்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், எனப்பல- வகைப்படும். இவைகள் யாவும் தொல்லியற் சான்றுகள் எனப்படும் வரலாற்று மூலங்களாய் நின்று அந்த நாட்டின் அல்லது மறைந்த சாம்ராஜ்சியங்களின் பெருமையை அறிய வைக்கும் சான்றுகளாகின்றன. இவ்வகையில் "தஞ்சைப் பெருங்கோவில்" என்பது இராஜஇராஜ சோழனதும் சோழ சாம்ராஜ்சியத்தினதும் ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த தமிழரின் பெருமையையும் சந்தேகத்திற்கு இடமின்றி என்றும் நிரூபிக்கும் சான்றாக விளங்குகின்றது.

இவ்வகையில் ஈழத்தமிழரின் வரலாற்றில் வல்வட்டித்துறை வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரன் கோவிலும் அதனை அமைந்த சந்ததியினரும் பெரும் வரலாற்றைப் படைத்தவர்களாகவும். அதன் மூலம் ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாகவும் மாற்றமடைந்துள்ளனர்.

"இன்றைய சம்பவங்களே நாளைய சரித்திரங்கள்" இவ்வகையில் நமது கண்முன்னே நடந்த சரித்திரமாய் பெரும் சகாப்த்தமாய் விரிந்தவர்தான் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். இவருடைய ஆட்சிமுறை உலகையே வியப்பில் ஆழ்த்தியது. இராணுவம், கடற்படை, வான்படை, காவல்துறை நுண்கலை, கல்வி சமயம், இலக்கியம், கட்டிடக்கலை, எனஇன்னும் பலதையும் உள்ளடக்கிய ஆட்சி மொழியாகத் "தமிழ்மொழி"யே ஈழத்திலே அரசோட்சியது.

நானூற்றி முற்பத்தென்பது (439) வருடங்களுக்கு முன் 1561 இல் நாற்பத்திரண்டு வருடங்களாக யாழ்ப்பாணத்தை அரசாண்ட 7ம் செகராசசேகரன் என்னும் "முதலாம்சங்கிலி" பலத்த போராட்டத்தின் பின்

போர்த்துக்கேசரிடம் தனது அரசைப்பறி கொடுத்தான். இவனே உலகத்தமிழினத்தின் இறுதித் தமிழ் மன்னன் ஆவான். இவன் காலத்தின் பின் அரசாண்ட பண்டாரவன்னியன் வீரபாண்டியகட்டப்பொம்மன் என்போர் சிலஅரசநிர்வாகப் பிரிவுகளின் அல்லது சமஸ்தானங்களின் அதிகாரிகளாகவே கணிக்கப்படுகின்றனரேயன்றி அவர்கள் இறைமையும் தன்னாட்சியும் கொண்ட ஒரு நாட்டின் அரசர்களல்ல என்பதே வரலாறு.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் எண்ணியபடி ஈழத்தமிழர்களுக்கென தனியான நிலப்பிரதேசம், தனியான நிர்வாகப்பிரிவு, தனியான படைப்பிரிவு, தனியான தேசியக்கொடி, என்பன கொண்டு தனிஅரசாகவும் தனித்துவமாகவும் ஈழத்தினை அரசாண்டவர். இவருடைய தாக்கம் இந்தியஉபகண்டம், தென்னாசியா என்பவற்றைக்கடந்து சர்வதேசம் வரை வியாபித்திருந்தது. இதன் மூலம் பாடுபொருளாகவும் பேசுபொருளாகவும் மட்டுமின்றி பலரும் பார்ப்பதற்கு விரும்பிய இவரின் அதிசய வாழ்க்கை ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியதாகின்றது. ஏனெனில் அதிசயமான அசுர சாதனைகளையும் பெரும் அரசியல் மாற்றங்களையும். அவர் தனதுகாலத்தில் செய்திருந்தார்.

“தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல்வேண்டும்” என்ற “மகாகவி”பாரதியின் கனவை நனவாக்கியவர் உலகத்தில் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருவரேயாவார்.

1973 மார்ச் 22இல் சிங்கள அரசால் குறிவைக்கப்பட்ட “பிரபாகரன்” மீது 1978 மே 19 இல் இலங்கைப் பராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட புலித்தடைச்சட்டத்தின் மூலம் ஸ்ரீலங்கா அரசால் பகிரங்க போர்ப்பிரகடனம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து சிறிதும் பெரியதுமான பல படையெடுப்புக்களை பிரபாகரன் என்னும் தமிழீழ அரசுமீது ஸ்ரீலங்கா மேற்கொண்ட போதும் எம்முயற்சியும் பலனளிக்கவில்லை. இறுதியில் ஈராக் மீது ஐநாவின் ஆதரவுடன் பன்னாட்டுப் படைகளின் உதவியுடனும் அமெரிக்கா தொடுத்த போரில் “மன்னர்” சதாமின் ஆட்சியினை அகற்றியது. அதே போல ஐநாவின்செயலாளர், செயலாளரின் செயலாளர், என்போருடன் இணைந்து பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளும் ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து “பிரபாகர” ஆட்சியை எம்மண்ணில் இருந்து அகற்றியது.

எனினும் ஆறு இலட்சம் மக்கள்படையை தன்னகத்தே வைத்திருந்த சதாமை உயிருடன் கைதுசெய்தது போல் நவீன “தமிழ்சக்கரவர்த்தி”யான பிரபாகரனை இன்றுவரை கைது செய்ய முடியவில்லை. 2009 மே 19 இல் இறுதியாக பிரபகரனது கட்டுப்பாட்டில்

இருந்த கரையா(ர்) முள்ளிவாய்க்காலில் அவரை அழித்து விட்டதாக ஒரு உடலைக் காட்டி ஸ்ரீலங்கா அரசாங்கம் பிரச்சாரம் செய்தது. எனினும் அதனை நம்ப உலகம் தயாராக இருக்கவில்லை.

இந்நிலையில் எப்பொழுதும் போல் "யார் இந்தப் பிரபாகரன்"? என்னும்கேள்வி உலகளாவியரீதியில் எழுந்தது. வேலுப்பிள்ளை பிரபாகரன் என பதில் இலகுவாகியது!........ ஆனால் அதன்பின இருந்த மர்மம் பிரபாகரனிடம் எழுந்த அந்த சத்திய ஆவேசம், அவரை உருவாக்கிய காரணங்கள் எனப்பல கேள்விகள் உருவாகின. இவற்றுக்கான விடையைத் தேடினால் விஸ்வரூபமாகத் தெரிவது தான் "திருவேங்கடம் வேலுப்பிள்ளை"அப்பா. ஆம் அத்தனை கேள்விகளுக்கும் ஒரேபதில் இவர்தான்.

இவர் ஒரு சதாரண மனிதர் அல்ல! இவருக்குள் மறைந்திருந்த பல சிறப்புக்களும் திறமைகளும் பிரபாகரன் ஊடாக வெளிவந்தன. அதனால் தான் சர்வதேசத்தில் தமிழுக்கு முகவரிதந்த தனயனுக்குத் தந்தையாகி இன்று தமிழுக்கே "மாதந்தை" ஆனார்.

பிரபாகரனைப்பற்றி அறியவேண்டும் என்றால் முதலில் வேலுப்பிள்ளை அப்பாவைத்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஒருமனிதனை உருவாக்குவதில் "பரம்பரை மரபணுக்களும் சமூகச்சுழலுமே" பெரும் பங்கு வகிக்கின்றன. என வேலுப்பிள்ளை அப்பாவை எனக்குக் காட்டிய "பேராசிரியரும் மூத்தசமூக விஞ்ஞானியுமான கார்த்திகேசு சிவத்தம்பி"யின் கூற்று இவ்விடத்தில் கட்டாயம் குறிக்கப்படுதல் வேண்டும்.

அவ்வகையில் "பிரபாகரன்" என்னும் சகாப்தத்தை ஆராய்வதற்கு உறுதியான கல்வெட்டுச்சான்று போல் இருந்தவரே வேலுப்பிள்ளை அப்பா.

வேலுப்பிள்ளைஅப்பா 1918 இல்வெளிவந்த "யாழ்ப்பாணவைபவகௌமுதி" புத்தகத்தில் குறிக்கப்பெற்ற "திருமேனியார் வெங்கடாசலம்பிள்ளை" வெளிவந்தவர். இப்பரம்பரை வழியில் இவரது பெயரை ஏழாவதாக நாம் காணலாம். ஆனால் 1860 – 1870 களில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்றிருந்த சட்டத்தரணியும் அன்று பிரபல்யமாயிருந்த "பிறிமன்" (freeman) பத்திரிகையின் பதிப்பாசிரியருமான திரு. கூல்ட் (Gould) பற்றி வல்வை ந. ஆனந்தராஜ் எழுதிய "கூழ் நியாயம்" மற்றும் வல்வட்டித்துறையில் கிடைத்த

வேறுசில ஆவணங்களின் மூலமும் இவரின் வம்சத்தில் இவருடைய பெயர் பன்னிரண்டாவதாகவும் இவருடைய புகழ்பெற்ற மைந்தனான தமிழரின் "தேசியத்தலைவர்" ஆன பிரபாகரனது பெயர் பதின்மூன்றாவதாகவும் காணப்படுகிறது. இவ்வாறு பதிவிற்குள்ளாக்கப்பட்டுள்ள இவர்களது வம்சமானது வாழையடி வாழையாக பெரும் வரலாறாகவே வளர்ந்து வந்துள்ளமை கண்கூடானது.

வல்வட்டித்துறையின் தலையாரிக் குடும்பமாகவும் யாழ்ப்பாணத்தின் முன்னணிக்குடும்பமாகவும் தமிழீழத்தின் தேசியத்தலைவரது குடும்பமாகவும் உயர்ந்த இவர்களது குடும்பத்தவரின் வாழ்வு போலவே "மாதந்தை" என போற்றப்படும் திரு வேலுப்பிள்ளை அப்பாவுடைய வாழ்வும் போற்றுதற்குரியது. 17ம் 18ம் 19ம் 20ம் 21ம் நூற்றாண்டுவரை தொடர்ச்சியாக தம்மை அடையாளப்படுத்திய அற்புதமான குடும்பத்தில் வந்த ஏனையவர்களைப் போலவே இவரும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பனவற்றின் ஊடாக மிளிர்ந்து அன்பு அடக்கம் அஞ்சாமை என்பனவற்றின் மூலம் வாழ்வாங்கு வாழ்பவர் ஆகின்றார்.

தனது குடும்பப்பெருமைகளை தவிர்த்து இறுதிவரை தனது பெயரிலேயே வாழ்ந்து வந்தது தான் இவரின் மிகப் பெரிய சிறப்பாகியது. சிறிய செயல்களையே பெரிதுபடுத்தும் இவ்வுலகில் மிகப்பெரும் சக்தி வாய்ந்த தனது மைந்தனுடைய "பிரபாகரன்" என்னும் பெயரை எவ்விடத்திலும் பயன்படுத்தாத இவரின் பண்பினை வியப்பதற்கு வார்த்தையில்லை.

"நான் என்னுடைய சுகத்தையெல்லாம் நானாகவே அர்ப்பணித்து நாட்டுக்காக வாழப்போகிறேன். என்னை என்னுடைய வழியில் போகவிட்டு விடுங்கள்." என 1971ல்கூறிய பதினேழுவயது நிறையாத தனதுமகன் பிரபாகரனிடம். "எங்களிற்கு கொடுத்து வைக்கவில்லைஉன்னைப்போல்அர்ப்பணிப்பதற்கு"சந்தேசமாகச்செய்" ஆனால் நான் ஒரு அரசாங்கஊழியன். என்றபடியால் நீயும்நானும் இனி இணைந்து வாழ முடியாது." எனக்கூறி போராடப்புறப்பட்ட மகனிற்கு 1971இலேயே விடையளித்தவர்தான் இந்தத்தந்தை. அதனால் தான் இவர் "மாதந்தை". இதனை வேறு எந்தத் தந்தையாலும் அக்காலத்தில் செய்ய முடியாது. இவ்வாறான இந்தத் "தந்தையின்ஆசி" தான் மைந்தனை உலகம் போற்றும் "உத்தமன்" ஆக்கியது.

1971 முதல் 1985 வரை குடும்பப்பற்று பாசமெல்லாவற்றையும் மனதில் அடக்கி வைத்து ஆசை மகனுடன் பேசாமல் பார்க்காமல் இருந்தவர்தான் மாதந்தை. 14 வருடங்களின் பின் உறவினர் ஒருவரது திருமணத்திலே மகனைச் சந்தித்தார். மகனே முன்வந்து பாசமுடன் உரையாடி தந்தைக்குரிய மரியாதையைக் கொடுத்ததும் அதனைத்தொடர்ந்து இருவரும் அன்புருக உரையாடியதும் இவர்களது உறுதியான குணத்திற்கும் பாசத்திற்கு ஏங்கிய இரக்கமான மனதிற்கும் அடையாளமான சம்பவமாகும்.

பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை என எல்லோராலும் சுட்டப்பட்ட போதும் மெல்லிய புன்சிரிப்புடன் விலகிக் கொள்ளும் இவர். 2009 மே 21ம் நாள் “நான்தான் பிரபாகரனின் தந்தை” என எழுந்து சென்றது வாழ்நாளில் ஒரு முறைதான். அது மெனிக் பாம் முகாமில் இராணுவத்தின் முன்…………. அதுதான் வேலுப்பிள்ளையப்பா. ஆம் அவர் எப்பொழுதும் “திருவேங்கடம் வேலுப்பிள்ளைதான”.

“ஒருமையில் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து” (அறத்துப்பால் 126)

என இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வள்ளுவன் சொன்ன ஒரு குறளுக்கு மட்டும் அல்ல. அறத்துப்பாலில் உள்ள அத்தனை வரிகளுக்கும் உதாரணம் கொண்ட ஒரு “மகாபுருஷர்” வேலுப்பிள்ளை அப்பா மட்டும் தான்.

மாபெரும் எழுச்சியை ஈழத்தில் உண்டாக்கியது மகனின் வாழ்வு. மாபெரும் அதிர்ச்சியை உலகத்தில் உண்டாக்கியது அப்பாவின் சாவு! இது வெறும் சாவல்ல! பெரும் சகாப்பத்தின் திறப்பு!

வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் குடிகொண்டிருந்த அத்தனை திறமைகளின் பெருமைகளின் ஆரம்பஊற்று திருவேங்கடம் வேலுப்பிள்ளை அப்பாதான். உலகம் புரிந்து கொண்டது. “பிரபாகரப்பெருமையின்” மர்மவிடை அவிழ்ந்து கொண்டது.

ஆம் இவர் வழியாகத் தனயனும், அவர் வழியாகத் தமிழனும் பெருமைப்பட வேண்டிய ஆகர்ஷ சக்தியே “வேலுப்பிள்ளை அப்பா”

இவர்களின் காலத்தில் நாங்களும் வாழுகிறோம்.
இவர்களின் பெருமைகளை எப்பொழுதும் பேசுவோம்.

நன்றியுடன்
அன்புள்ள அப்பாவிற்காக
“தமிழ்நீ”பொன்.சிவகுமாரன்